1972 சனவரி 29]

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Chief Minister whether it is a fact that a private mint has been unearthed in Madras recently?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி ஒன்றும் இப்போது எனக்கு விபரமான தகவல் இல்லை.

* 114வினு.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்குப் விடையளிப்பாரா :

(அ) 1971 செப்டம்பர் முதல் வாரத்தில் கோவையில் ஒரு வீட்டில் திடீர் சோதனை நடத்தப்பட்டு நகைகளும் நோட்டுகளும் கைப்பற்றப்பட்டனவா?

(இ) அவை திருடப்பட்ட பொருள்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இது விஷயம் மத்திய ஆயத்துறையின் புலனாய்வில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அங்கு கைப்பற்றப் பட்ட நோட்டுகளில் கள்ள நோட்டு இருந்ததா என்று அறிய விரும்புகிறேன். அதோடு * தமிழ்நாடு பூராவும் அது பரவக் கூடிய நிலை இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. எனவே * என்பதை எடுத்துவிடும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கு கண்டுபிடிக்கப் பட்ட நகைகளை வைத்து கள்ளத்தனம் நடைபெற்றதாகத் தகவல் கிடைத்ததும், போலீஸார் சோதனை செய்து பலன் விசாரணை நடத்தினர். கைப்பற்றப்பட்ட நகைகளை, அவற்றின் உரிமையாளர்கள் யாரும் அடையாளம் காட்டவில்லை. அதனால் கைப்பற்றப் பட்ட நகைகளை மத்தியப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றி இருக்கிறார்கள். கள்ள நோட்டுகள் இருந்ததாகத் தகவல் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, திருவண்ணாமலையில் அண்மையில் இதுபோன்ற ஒரு குற்றம் கண்டுபிடிக்கப் பட்டதாக கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உண்மை தான்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.